## 41. மாற்றிடுவார் மாற்றிடுவார் என்

### பல்லவி

மாற்றிடுவீர் மாற்றிடுவீர்
என் நிலையை மாற்றிடுவீர்
மாறிடுமே மாறிடுமே என் வாழ்வு மாறிடுமே
உயர்த்திடுவீர் உயர்த்திடுவீர்
என் தலையை உயர்த்திடுவீர்
உயர்ந்திடுமே உயர்ந்திடுமே
உன் வாழ்க்கை உயர்ந்திடுமே

### சரணங்கள்

1. சீயோனில் துயரபட்ட யாவருக்கு
சீர்படுத்தி ஆறுதல் தருவீர்
சாம்பலுக்கு பதிலாக எனக்கு
சிங்காரத்தை கொடுத்திடுவீர்
- மாற்றிடுவார்

2. துயரத்திற்கு பதிலாக எனக்கு
ஆனந்த தைலத்தை ஊற்றிடுவீர்
ஒடுங்கின ஆவிக்கு பதிலாக எனக்கு
துதியின் உடையை உடுத்திடுவீர்
- மாற்றிடுவார்

3. வெட்கத்திற்கு பதிலாக எனக்கு
இரட்டிப்பான பலன் தருவீர்
இலட்சைக்கு பதிலாக எனக்கு
இரட்டிப்பான சந்தோஷம் தருவீர்
- மாற்றிடுவார்